**CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE**
**මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය**
**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்**
No. 6 1/B, Layards Road, Colombo 05. **Tel:** +94112584047 / +94114503001
**Fax:** +94112584047 **E-mail:** cmev@cpalanka.org **Web:** www.cmev.org

*திகதி: பெப்ரவரி 28, 2023, கொழும்பு.*

**2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை தேர்தலின் போது பதிவான மரணம் தொடர்பான அறிக்கை**

2023 உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நேற்று பதிவான மரணம் குறித்து CMEV தனது ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்துகிறது. தேசிய மக்கள் சக்தி (NPP) ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட பேரணி மீது இலங்கை பொலிஸ் நிகழ்த்திய ஜனநாயகமற்ற மற்றும் அடக்குமுறை நடவடிக்கைகள் காரணமாகவே இம்மரணம் சம்பவித்துள்ளது. 2023 பெப்ரவரி 26ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற இந்த பேரணியின் மீது பொலிஸார் நிகழ்த்திய கண்ணீர்ப்புகை தாக்குதல் மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தினால் காயமுற்ற நிவிதிகல பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் நிமல் அமரசிறி எனும் வேட்பாளரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தலானது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரச தரப்பினால் தேர்தல் ஆணைக்குழு முகம் கொடுக்க நேர்ந்த தொடர்ச்சியான தடைகள் காரணமாக காலவரையறையின்றி பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே NPP இன் பேரணியானது இடம்பெற்றது. இதற்கு எதிராக விதிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை மீறியே இப்பேரணி நடாத்தப்பட்டது. இதன்போது பொலிஸார் பெருந்திரளான கூட்டத்தினர் மீது கனமான நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இதன் காரணமாக 28 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இருவர் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் ஒருவரான திரு. அமரசிறி என்பவரே நேற்றைய தினம் உயிரிழந்தார்.

மக்களின் வாக்குரிமையை மீறும் வகையில் செயற்படும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு CMEV தனது கண்டனத்தை தெரிவிக்கின்றது. குறிப்பாகஇ மக்களின் ஜனநாயக உரிமைகளைத் தடுக்கவும் மற்றும் ஒரு கடுமையான அடக்குமுறையினை பிரயோகிக்கும் விதத்தில் பொலிஸாரை அரசாங்கம் பயன்படுத்தியதையும் CMEV கண்டிக்கின்றது. மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்கு அரசாங்கமும் அரச அதிகாரிகளும் கடமைப்பட்டவர்கள் என்பதனை CMEV நினைவூட்டுகின்றது. அதே போன்றுஇ இலங்கை பொலிஸார் மற்றும் அனைத்து சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களும் குறைந்தது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை வழங்கியாக வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய ஜனநாயக போராட்டங்களை தடுத்தல், தடை செய்தல் மற்றும் அல்லது வன்முறையை பிரயோகித்தலில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

**கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து** — *இணை-அழைப்பாளர்*

**திரு. உதய களுப்பத்திரண** — *இணை-அழைப்பாளர்*

**திரு. லசந்த டி சில்வா** — *இணை-அழைப்பாளர்*